# இஸ்லாமிய திருமணமொன்றில் பெண்ணுக்கான பொறுப்புதாரரின் (வலி) அவசியமும் மணமகளது சம்மதமும்

ESSENTIAL OF PRESENCE OF A WALI FOR THE WOMAN AND CONSENT OF THE BRIDE IN ISLAMIC MARRIAGE

Usthaz M.A.M. Mansoor, Naleemi, BA (Hons),
*Director of AL-quran Open College, Director of Mishkath Research Institute*
*Usthaz.Mansoor@gmail.com*

**Summary**

*Marriage is a contract that imposes significant responsibilities on both the man and woman involved. One party to this contract is the groom, and it is a fundamental principle of Islamic law that he possesses complete autonomy in entering into this contract. The next party to the contract is the bride. It is debated in Islamic law whether she has full autonomy in entering into the contract or whether her guardian, usually her father, has the right to enter into the contract on her behalf. This is a nuanced issue within Islamic law that is to be investigated in this article. Additionally, the Muslim Marriage and Divorce Act is also discussed.*

## 1. அறிமுகம்

திருமணம் என்பது ஆண், பெண் இரு பாலார் வாழ்விலும் மிகப் பெரும் தாக்கத்தை விளைவிக்கும் ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின் ஒரு தரப்பு மணமகனான ஆண் ஆவான். அவனுக்கு அந்த ஒப்பந்தத்தை நடாத்துவதில் முழுச் சுதந்திரமும் உள்ளது என்பது இஸ்லாமிய சட்டத்தின் கருத்துவேறுபாடற்ற மிகத் தெளிவான நிலைப்பாடாகும். ஒப்பந்தத்தின் அடுத்த தரப்பு மணமகளான பெண் ஆவாள். அவளுக்கு ஒப்பந்தத்தை நடாத்துவதில் முழுச் சுதந்திரம் உள்ளதா அல்லது அவளது பொறுப்புதாரரான தந்தையே அவளுக்குப் பதிலாக ஒப்பந்தத்தை நடாத்தும் உரிமை பெறுகிறாரா என்பது இஸ்லாமிய சட்டத்தில் கருத்து வேறுபாடான ஒரு பிரச்சினையாகும். அப்பிரச்சினையே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது. அத்தோடு, முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்ட நகல் பற்றியும் இங்கு நோக்கப்படுகிறது. கீழ்வரும் தலைப்புகளாகப் பிரித்து இவ்விடயம் இங்கு ஆராயப்படுகிறது.

1. சட்ட மத்ஹபுகளின் அபிப்பிராயங்கள்
2. அபிப்பிராயங்களுக்கான ஆதாரங்கள்

3. திருமண ஒப்பந்தத்தில் மணமகள் பெறும் அதிகாரமும் அவளது பொறுப்புதாரர் பெறும் அதிகாரமும்
4. ஆய்வு முடிவுகள்
5. இலங்கை முஸ்லிம் தனியாள் சட்ட நகலின் இப்பகுதி குறித்த ஆய்வுகள்
6. முஸ்லிம் தனியாள் சட்ட நகலின் இப்பகுதி குறித்த திருத்தத்திற்கான பரிந்துரைகள்

## 2. ஆய்வின் மையப் பிரச்சினை

பெண்ணுக்கான திருமணம், பொறுப்புதாரரை -வலி- வேண்டி நிற்கும். அதேவேளை, குறிப்பிட்ட நபரைத் திருமணம் முடிக்க பெண்ணின் அனுமதியும் பெறப்பட வேண்டும். பெண்ணின் திருமணம் தொடர்பான இவ்விரு நிலைப்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகக் காணப்படுவது போல் தோன்றுகிறது. பொறுப்புதாரரின் அனுமதி கட்டாயமாயின் பெண் கணவரைச் சுதந்திரமாகத் தெரிவு செய்தல் இல்லாமல் போகிறது. பெண்ணின் அனுமதி பெறுவது கட்டாயமாயின் பொறுப்புதாரரின் அதிகாரம் அற்றுப்போகிறது என்பதுவே அந்த முரண்பாடாகும்.

## 3. சட்ட மத்ஹபுகளின் அபிப்பிராயங்கள்

இப்பிரச்சினை குறித்து இஸ்லாமிய சட்ட மத்ஹபுகளிடத்தில் காணப்படும் நிலைப்பாடுகள் கீழே தரப்படுகின்றன. அவை இப்பிரச்சினை பற்றிய விரிந்த பார்வைக்கு வழிவகுக்கும்.

1. இமாம்களான மாலிக், ஷாபியீ, இப்னு அபீ லைலா: பருவ வயதை அடைந்த, புத்தி சுவாதீனமுள்ள இளம் பெண்ணை அவளது அனுமதி இன்றியே திருமணம் முடித்து வைக்கும் அதிகாரத்தை அவளது தந்தை பெறுகிறார். அவளிடம் அனுமதி கேட்பது விரும்பத்தக்கதாகும். ஆயினும், கட்டாயமானதல்ல. தந்தையின் தந்தைக்கும் இந்த அதிகாரமுள்ளது என்பது ஷாபியீ மத்ஹபினர் கருத்தாகும். இவர்கள் தவிர்ந்த ஏனைய பொறுப்புதார்களுக்கு - வலீகள் - இந்த அதிகாரம் கிடையாது. அதாவது, அவர்கள் பெண்ணின் அனுமதி கேட்டுத் திருமணம் முடித்துக் கொடுப்பது கட்டாயமானதாகும் (நவவி, 2017 மற்றும் முஸ்தபா ஸிபாஈ, 2001).

2. இமாம்களான அபூஹனீபா, அவ்ஜாயி, தௌரி : பருவமடைந்த புத்தி சுவாதீனமுள்ள இளம் பெண்ணைக் கட்டாயப்படுத்தித் திருமணம் முடித்துக் கொடுக்கும் அதிகாரத்தை அவளது தந்தையோ அல்லது வேறு பொறுப்புதாரரோ பெற மாட்டார். திருமணத்திற்கான அவளது அனுமதியைப் பெறுவது தந்தையாயினும் அவர் மீது கடமையாகும் (முஸ்தபா ஸிபாஈ, 2001).

3. இமாம் அஹ்மத்: இவரது ஒரு அபிப்பிராயம் இமாம் ஷாபியீ உடனும் இன்னோர் அபிப்பிராயம் இமாம் அபூ ஹனிபா உடனும் ஒத்துச் செல்கிறது (முஸ்தபா ஸிபாஈ, 2001).

ஷாபியீ மத்ஹபினர், பொறுப்புதாரிகளில் தந்தை அல்லது தந்தையின் தந்தை என்போருக்கு மாத்திரம் தமது பெண்ணைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்து வைக்கும் அதிகாரம் உள்ளது எனக் கூறியபோதும் அதற்குக் கீழ்வரும் நிபந்தனைகளை இடுகின்றனர்:

i. தந்தைக்கும் மகளுக்குமிடையே தெளிவான வெறுப்பு, எதிர்ப்பு மனப்பாங்கு காணப்படாதிருத்தல்
ii. தகுதியான, பொருத்தமான ஒருவருக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தல்
iii. பொருத்தமான மஹருக்குத் திருமணம் முடித்து வைத்தல்
iv. மஹரைக் கொடுக்க முடியாத வசதியற்றவராக இல்லாதிருத்தல்
v. குருடு போன்ற உடற் குறைபாடு உள்ளவர், வயது சென்றவர் போன்ற சமூக உறவாடலுக்குப் பொருத்தமற்றவருக்கு திருமணம் முடித்து வைக்காதிருத்தல் (முஹம்மத் அல் ஸுஹைலீ, 2015)

திருமணத்தில் பெண்ணின் சுதந்திரத் தெரிவு, அவளது பொறுப்புதாரரில் அது குறித்த அதிகார வரையறை என்ற மேலே விளக்கப்பட்ட அபிப்பிராயங்களின் பின்னணியிலிருந்து திருமணத்தில் வலியின் -பொறுப்புதாரரின்- வகிபாகம் குறித்த அபிப்பிராயங்கள் எழுகின்றன. அது பற்றிய சட்ட அறிஞர்களது அபிப்பிராயங்கள் கீழே விளக்கப்படுகின்றன:

1. இமாம்களான மாலிக், ஷாபியீ, அஹ்மத்: பொறுப்புதாரர் -வலி- இன்றி பெண்ணுக்குத் திருமணம் செய்வது அனுமதிக்கப்பட்டதல்ல. அப்போது, திருமணம் செல்லுபடியற்றதாகும். இது இன்னும் பல சட்ட அறிஞர்களது கருத்துமாகும். (முஸ்தபா ஸிபாஈ, 2001)

2. இமாம்களான அபூ ஹனீபா, அபூ யூசுப் அத்தோடு, தாபியீ இமாம்களான ஷ.்.பி, ஸுஹ்ரி: பொறுப்புதாரர் -வலி- இன்றி பெண்ணுக்குத் திருமணம் செய்து வைப்பது அனுமதிக்கப்பட்டதாகும். அவ்வாறு நிகழும் திருமணம் செல்லுபடியானதாகும். (முஸ்தபா ஸிபாஈ, 2001)

3. ஹனபி மத்ஹபின் இன்னோர் இமாமாகிய முஹம்மதின் அபிப்பிராயம்: பொறுப்புதாரரின் அனுமதி இன்றி பெண் திருமண ஒப்பந்தம் செய்தால், அது செல்லுபடியாவது பொறுப்புதாரரின் அனுமதியில் தங்கி இருக்கும். அவர் அனுமதித்தால் அது செல்லுபடியாகும். அனுமதிக்காவிட்டால் திருமணம் செல்லுபடியற்றதாகக் கொள்ளப்படும். (முஸ்தபா ஸிபாஈ, 2001)

4. இமாம் அபூ ஹனீபாவின் மேற்குறிப்பிட்ட கருத்து அவரது இன்னுமிரு அபிப்பிராயங்களையும் இணைக்கும் போதுதான் பூரணமாகும். அவற்றைக் கீழே தருகிறோம்:

   i. பொறுப்புதாரர் இன்றி நிகழ்த்தப்படும் திருமண ஒப்பந்தம் செல்லுபடியாகுமாயினும் பொறுப்புதாரரது அனுமதியைப் பெறுவது விரும்பத்தக்கதாகும்.

   ii. தகுதியான, பொருத்தமான கணவனாக இருத்தல், குறிப்பிட்ட பெண்ணுக்குப் பொருத்தமான மஹர் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளல் என்ற இரு ஷரத்துகளுடனேயே வலியற்ற திருமணம் நிறைவேறும். இவ்விரு ஷரத்துகளோ அல்லது ஒரு ஷரத்தோ காணப்படாவிட்டால் பொறுப்புதார் -வலி- ஆட்சேபனை தெரிவித்து காழி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். நீதிபதி நியாயங்களை விசாரித்துப் பொருத்தமான தீர்வை வழங்குவார் (விரிவாகப் பார்க்க: இப்னு ஆபிதீன், 2011, நவவி, 2017, இப்னு குதாமா, 2015 மற்றும் முஸ்தபா ஷலபி, 1977).

திருமண ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுதல் என்பது இந்த அபிப்பராயங்களைப் பின்பற்றியதாகும். ஷாபியீ, மாலிகி மத்ஹபுகள் பெண்ணின் அனுமதி அவசியமற்றது எனக் கருதுவதால், பெண்ணின் பொறுப்புதாரரது கையொப்பமே கட்டாயமானதாகும். குறித்த திருமணத்தில் தனது திருப்தியை உறுதி செய்யும் அவரது கையொப்பம் மட்டுமே திருமணம் நிறைவேறப் போதுமானதாகும். இந்நிலையில், திருமண ஒப்பந்தத்தில் பெண்ணின் கையொப்பம் விரும்பத்தக்கது மட்டுமேயாகும்.

இமாம் அபூ ஹனீபா, அபூ யூசுப் போன்றோர் பெண்ணின் அனுமதி கட்டாயமானதாகும்; -வலி- பொறுப்புதார் இன்றியே திருமண ஒப்பந்தம் நிறைவேறும் என்ற கருத்தைக் கொண்டிருப்பதால், திருமண ஒப்பந்தத்தில் தனது திருப்தியை உறுதி செய்ய பெண் கையொப்பமிடுவது கட்டாயமானதாகும். பொறுப்புதாரரின் கையொப்பம் அங்கு விரும்பத்தக்கதாக மட்டுமே அமையும்.

இனி, இச்சட்ட அபிப்பிராயங்கள் உருவாகக் காரணமாக அமைந்த ஆதாரங்களை நோக்குவது அவசியமானதாகும்.

### 4. சட்ட அபிப்பிராயங்களுக்கான ஆதாரங்கள்

மேலே விளக்கப்பட்ட சட்ட அபிப்பிராயங்கள் அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். அந்த ஆதாரங்களைக் கீழே தருகிறோம். அத்தோடு, அவை எடுத்தாளப்பட்ட முறைகளையும் சுருக்கமாக விளக்குகிறோம்.

### 3.1 அல்-குர்ஆன்

> ‘‘(மூன்றாவது முறையாக) அவன் அவளை விவாகரத்துச் செய்தால் அவனல்லாத வேறொரு கணவனை அவள் திருமணம் முடிக்கும் வரை முதலாவது கணவனை முடிப்பது அனுமதிக்கப் பட்டதாகாது’’ (ஸூரா அல்-பகரா:230)

ஒரு கணவன் தனது மனைவியை மூன்றாம் முறை தலாக் செய்தால், அதன் விளைவாக அமையும் சட்டத்தை இவ்வசனம் விளக்குகிறது. அந்நிலையில், குறிப்பிட்ட மனைவி இன்னொருவரைத் திருமணம் முடித்து, வாழ்ந்து, இயல்பாக இரண்டாம் கணவன் விவாகரத்துச் செய்தால் மட்டுமே முதலாம் கணவனை திருமணம் முடிக்க முடியும் என அது கூறுகிறது. அதனை விளக்கும் போது அல்-குர்ஆன், ‘‘வேறொரு கணவனை அவள் திருமணம் முடிக்கும் வரை...’’ எனக் கூறுகிறது. ‘‘அவளுக்குத் திருமணம் முடித்துக் கொடுக்கும்வரை’’ எனக் கூறவில்லை. இது பொறுப்புதாரர் -வலி- இன்றியே பெண் திருமணம் முடிக்கலாம் எனக் காட்டுகிறது.

> ‘‘நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்து விடுகிறீர்கள். அவர்கள் தமக்கான தவணையை அடைந்து விடுகிறார்கள். அப்போது, அவர்கள் தமது கணவன்மார்களை மீளவும் திருமணம் முடிப்பதற்கு நீங்கள் தடையாக இருக்க வேண்டாம்’’ (ஸூரா அல்-பகரா: 232)

ஒரு பெண் விவாகரத்துச் செய்யப்பட்டு, அதற்கான இத்தா இருந்து, அந்த இத்தா தவணை அதன் இறுதி நிலையை அடைந்து விடும் நிலையில், விவாகரத்துச் செய்த கணவனை மீளவும் திருமணம் முடிக்க நீங்கள் தடையாக இருக்க வேண்டாம் என இவ்வசனம் கூறுகிறது. இங்கும், ‘‘அவர்கள் தமது கணவன்மார்களைத் திருமணம் முடிப்பதற்கு...’’ என பொறுப்புதாரர்களோடு சம்பந்தப்படுத்தாமல், பெண்களே திருமணம் முடித்துக் கொள்ளலாம் என்றுதான் இவ்வசனம் கூறுகிறது.

பெண்ணின் திருமணத்திற்குப் பொறுப்புதாரர் -வலி- காணப்படுவது கட்டாயமல்ல என்ற கருத்தைக் கொண்டோர் இத்தகைய வசனங்களை ஆதாரமாகக் கொண்டனர். அதேவேளை, பெண் பொறுப்புதாரர் ஊடாக திருமணம் முடித்துக் கொடுக்கப்படுவது கட்டாயமானது எனக் கூறியோர் கீழ்வரும் வசனங்களை ஆதாரமாகக் கொண்டனர்:

> ‘‘நீங்கள், இறைவனுக்கு இணை வைப்போருக்கு, அவர்கள் இறை நம்பிக்கை கொள்ளும் வரை உங்களது பெண்களை திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டாம்’’ (ஸூரா அல்-பகரா: 221)

இவ்வாசனம், ‘‘பெண்களைத் திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டாம்’’ என்ற வசனத்தின் ஊடாக பொறுப்புதாரரின் அவசியப்பாட்டைக் கூறுகிறது.

“உங்களில் திருமணம் முடிக்காதோருக்கு திருமணம் முடித்து வையுங்கள்” *(ஸூரா அல்-நூர்: 32)*

இவ்வசனத்தில் வரும், “அயாமா” என்ற சொல்லுக்கு, “திருமணம் முடிக்காத பெண்கள்” என்று இவர்கள் பொருள் கொண்டனர். அப்பொருளின் படி இங்கு பெண்களை திருமணம் முடித்துக் கொடுக்குமாறு கேட்கப்படுவது பொறுப்புதாரர்களை நோக்கியாகும் எனக் கொள்ள முடிகிறது.

அல்-குர்ஆனின் இவ்வசனங்களை பெண்ணின் திருமணத்தில் பொறுப்புதாரர் நிலை பற்றிய விடயத்தில் ஆதாரமாகக் கொண்டு இருவகைக் கருத்துக் கொண்டோரும் வாதிக்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. எனினும், இந்த அல்-குர்ஆன் வசனங்களிலிருந்து பெறத்தக்க வலி - பொறுப்புதாரர்- பற்றிய கருத்தை ஸுன்னா எவ்வாறு விளக்குகிறது என நோக்கும்போது கருத்து மேலும் தெளிவாகிறது. *(முஸ்தபா ஸிபாஇ, 2001 மற்றும் முஸ்தபா ஷலபி, 1977)*

### *3.2 ஸுன்னா*

*கீழ்வரும் ஹதீஸ்கள் திருமணத்தில் பெண்ணின் நிலை குறித்து விளக்குகின்றன:*

i. அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கிறார். இறை தூதர் (ஸல்) கூறினார்கள்: “ஒரு கன்னிப் பெண் அவளது அனுமதி பெறப்படாமல் திருமணம் முடித்துக் கொடுக்கப்படக் கூடாது.” “அல்லாஹ்வின் தூதரே! அவளது அனுமதி எவ்வாறு அமையும்” என அப்போது நபித்தோழர்கள் கேட்டார்கள். “அவள் மௌனமாக இருத்தல்” என இறை தூதர் அதற்குப் பதில் கூறினார்கள். *(ஸஹீஹ் அல்-புகாரி: 5136, முஸ்லிம்: 1419)*

ii. அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கிறார். இறை தூதர் (ஸல்) கூறினார்கள்: “விதவையுற்ற பெண் அவளிடம் கட்டளை பெறப்படாமல் திருமணம் முடித்துக் கொடுக்கப்படக்கூடாது. கன்னிப்பெண் அவளிடம் அனுமதி பெறப்படாமல் திருமணம் முடித்துக் கொடுக்கப்படக் கூடாது. அவளது அனுமதி மௌனமாக இருத்தலாகும்.”
*(ஸுனன் திர்மிதி: 1107, ஸஹீஹ் ஜாமிஉ அல்-ஸகீர்: 7471, இமாம் புகாரி, முஸ்லிம் ஆகியோர் சிறிய வித்தியாசத்துடன் இதே வகையில் பதிவு செய்துள்ளனர்).*

iii. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கிறார். இறை தூதர் (ஸல்) கூறினார்கள்: “விதவையுற்ற பெண் தனது விடயத்தில் அவளது பொறுப்புதாரரை விட உரிமையுடையவள். கன்னிப் பெண்ணிடம் அவளது தந்தை அனுமதி பெறுவார்.” *(ஸஹீஹ் முஸ்லிம்: 1421)*

பொறுப்புதாரர் ஆகிய தந்தை அல்லது தந்தையின் தந்தை ஊடாகவே பெண் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமல்ல எனக் கூறுவோர், ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஸூரா அல்-பகரா *230, 232*ஆம் வசனங்களை ஆதாரமாகக் கொண்டதோடு, இந்த ஹதீஸ்கள் கொடுக்கும் தெளிவான நேரடிக் கருத்தையும் ஆதாரமாகக் கொண்டனர்.

ஆனால், பெண்கள் திருமணம் முடிக்கப் பொறுப்புதாரர் -வலி- இருப்பது கட்டாயமானது என்ற கருத்தைக் கொண்டவர்கள் மேலே குறிப்பிட்ட ஸூரா அல்-பகரா: *221*ஆம் வசனத்தையும் ஸூரா அல்-நூரின்: *32*ஆம் வசனத்தையும் ஆதாரமாகக் கொள்வதோடு, இங்கே குறிப்பிடப்பட்ட ஹதீஸ்களின் சில பிரயோகங்களையும் ஆதாரமாகக் கொள்கிறார்கள். அதனைக் கீழே தருகிறோம்:

i. திருமணம் முடித்து விவாகரத்தாலோ கணவன் இறந்ததினாலோ விதவையுற்ற பெண்ணை கன்னிப் பெண்ணை விட வித்தியாசப்படுத்தி இந்த ஹதீஸ்கள் காட்டியுள்ளன.

  "கன்னிப் பெண்ணின் அனுமதி மௌனமாக இருத்தல்" எனக் கூறும் ஹதீஸ், கட்டளை பெறுதல் என்ற பிரயோகத்தின் மூலம் விதவைப் பெண் நேரடியாகப் பேசி தனது கருத்தை வெளியிடுவாள் என்ற கருத்தை உணர்த்துகிறது. அத்தோடு, அடுத்த ஹதீஸ் விதவைப் பெண் தனது விடயத்தில் பொறுப்பதாரரை விட உரிமையுடையவள் என நேரடியாகவே கூறுகிறது. இந்தவகையில் கன்னிப் பெண் விடயத்தில் கூடுதல் உரிமை அவளது தந்தைக்கு உள்ளது என்ற கருத்தும் பெறப்படுகிறது. இந்தவகையில் அவளிடம் அனுமதி கேட்டல் என்பதை விருப்பத்திற்குரிய ஒரு விடயம் என்றே கருத வேண்டும்.

ii. ஒரு கன்னிப் பெண் ஆண்கள் பற்றிய அறிவும் தெளிவும் கொண்டவளல்ல. அவர்களோடு உறவாடி அவர்கள் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பை அவள் பெறுவதில்லை. எனவே, கணவன் தெரிவை அவள் கையில் விடுவது பிழையான தெரிவுக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்பம் உள்ளது. இப்பின்னணியிலேயே, இறை தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருக்க முடியும் என இக்கருத்தை இவர்கள் விளக்குவர்.

### *3.3* பெண்ணின் திருமணத்தின்போது பொறுப்புதாரர் பெறும் அதிகாரம் பற்றி விளக்கும் ஆதாரங்களை ஆராய்தல்

இரு பக்க ஆதாரங்களையும் இங்கு ஓரளவு விளக்கமாகக் குறிப்பிட்டோம். இப்போது, இந்த ஆதாரங்களை இரு சாராரும் எடுத்தாண்டுள்ள முறையை விமர்சனக் கண்ணோட்டத்தில் நோக்கி இவ்விடயத்தில் பொருத்தமான அபிப்பிராயத்தைத் தெரிவு செய்ய முயல்வோம்.

i. ஸூரா அல்-நூரின் *32*ஆம் வசனத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ள, "அயாமா" என்ற சொற்பிரயோகம் திருமணம் முடிக்காத ஆண், பெண் இருசாராரையும்

குறிக்கும் என்பதே பொருத்தமான கருத்தாகும். தொடர்ந்து, ''நன்னடத்தை கொண்ட உங்களது அடிமை ஆண்களையும் பெண்களையும்...'' என்ற வசனத் தொடர் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது (*அஹ்மத் முஹம்மத் ஷாகிர், 2014, ஸமக்ஷரி 2015 மற்றும் அப்துர் ரஹ்மான் ச.ஃ.தி, ஹி. 1404*). அடுத்து, ஆதாரமாகக் கொள்ளப்பட்ட ஸூரா அல்-பகராவின் *221*ஆம் வசனம் வலி -பொறுப்புதாரர்- இருத்தல் பெண்ணின் திருமணம் நிறைவேறக் கட்டாயமானது என்ற கருத்தை காட்ட முடியுமாயினும் பெண்ணை கட்டாயப்படுத்தித் திருமணம் முடித்து வைக்கும் அதிகாரத்தை அவர் பெறுகிறார் என்ற கருத்தை அது தெளிவாகக் காட்டவில்லை.

ii. பெண்ணின் திருமணத்தில் பொறுப்புதாரரின் அனுமதி கட்டாயமானதல்ல என்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்ட ஸூரா அல்-பகராவின் *230, 232*ஆம் வசனங்கள், திருமணத்தை தீர்மானிப்பதில் பெண்ணுக்கான சுதந்திரத்தைக் காட்டுகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பொறுப்புதாரருக்கு அதில் எந்த அதிகாரமும் கிடையாது என்று கருத்தை அவை காட்டுவதாகக் கொள்ள முடியாது.

iii. திருமணத்தில் பெண்ணின் நிலையை விளக்க மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸ்கள் கணவனைத் தெரிவதில் அவளுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது எனத் தெளிவாகக் காட்டுகின்றன. கணவனை இழந்த விதவைப் பெண்ணுக்கும் கன்னிப் பெண்ணுக்கும் இடையே வேறுபாடு காட்டும் வகையில் அமைந்த சொற்பிரயோகங்களைக் கணவன் தெரிவில் பெண்ணுக்கு சுதந்திரம் இல்லை எனக் காட்டும் வகையில் விளக்க முற்படுவது பொருத்தமற்றதாகும். அதனைக் கீழ் வருமாறு விளக்கலாம்:

(அ) இறை தூதர் (ஸல்) கன்னிப் பெண்ணிடம் அனுமதி பெற வேண்டும், விதவைப் பெண்ணிடம் கட்டளையைப் பெற வேண்டும் என்றுதான் வேறுபடுத்தினார்களே அன்றி, கட்டாயப்படுத்தித் திருமணம் முடித்துக் கொடுக்கும் அதிகாரம், கட்டாயப்படுத்தாது சுதந்திரம் கொடுத்துத் திருமணம் முடித்துக் கொடுக்கும் செயற்பாடு என வேறு படுத்தவில்லை. கன்னிப் பெண் திருமண விடயத்தில் வெட்கப்படுவாள். தந்தையே திருமணம் பேசுவார். அந்நிலையில், அவர் அனுமதி கேட்டு அதனைச் செய்ய வேண்டும் என இறை தூதர் (ஸல்) அவர்கள் இங்கே கூறுகிறார்கள். ஆனால், விதவைப் பெண் திருமணம் முடிக்கும் விடயத்தில் தெளிவாகப் பேசுவாள். தனது விருப்பு வெறுப்பைத் தெளிவாக வெளியிடுவாள். பெண்களின் இந்த இயல்பைப் பின்னணியாகக் கொண்டே இறை தூதர் (ஸல்) அவர்களது இப்பிரயோகம் அமைந்துள்ளது.

''விதவைப் பெண்கள் தனது விடயத்தில் பொறுப்புதாரரை விடக் கூடுதல் உரிமை உடையவள்'' என்ற இறை தூதர் (ஸல்) அவர்களது வார்த்தை விதவைக்கு உள்ள கூடுதல் உரிமையைக் காட்டுகிறது என்பது

உண்மையேயாயினும், கன்னிப் பெண்ணின் அதிகாரம் முழுமையாக தந்தையிடம் சென்று விடும் என்ற எதிர்மறைக் கருத்தை அது காட்டும் எனப் பொருள் கொள்வது பொருத்தமற்றதாகும். அவ்வாறு பிழையாகப் பொருள் கொள்ளப்படக் கூடாது என்பதனால்தான் அதே ஹதீஸில் தொடர்ந்து, "கன்னிப் பெண்ணிடம் அவளது தந்தை அனுமதி பெறுவார்" என இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆ) திருமண விடயத்தில் பெண்ணின் தெரிவுச் சுதந்திரம் கட்டாயமானது என்ற கருத்தை மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸ்கள் காட்டுகின்றன என்பதனை கீழ்வரும் இரண்டு ஹதீஸ்களும் உறுதிப்படுத்துகின்றன.

i. "எனது தந்தை எனது விருப்பமின்றியே திருமணம் முடித்துக் கொடுத்தார்" என கன்ஸா பின்த் கிதாம் (ரழி) என்ற பெண்மணி அறிவிக்கிறார். அவர் ஒரு விதவைப் பெண். அப்போது, அப்பெண் இறை தூதர் (ஸல்) அவர்களிடம் போய் அதனை முறையிட்ட போது இறை தூதர் (ஸல்) அவர்கள் அவரது திருமணத்தை ரத்துச் செய்தார்கள். (ஸஹீஹ் அல்-புகாரி: 5138)

ii. இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கிறார்: ஒரு கன்னிப் பெண் இறை தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து தனது தந்தை, தான் விரும்பாத போதும் தனக்குத் திருமணம் முடித்து வைத்ததாகக் கூறினார். அப்போது, இறை தூதர் (ஸல்) அவர்கள் அவளுக்கு அதனை ரத்து செய்யும் உரிமையைக் கொடுத்துத் தீர்ப்பளித்தார்கள். (அல்பானி - ஸஹீஹ் ஸுனன் அபீ தாவூத்: 2096, இப்னு மாஜா: 1875)

இங்கு இறை தூதர் (ஸல்) அவர்கள் விதவைப் பெண், கன்னிப் பெண் இருவருக்குமே ஒரே வகையான தீர்ப்பைக் கொடுத்தமை நன்கு தெளிவாகிறது. இதன் மூலம் திருமணத்தில் பெண்களது தெரிவுச் சுதந்திரம் பற்றி முன்னர் குறிப்பிடப்பட்ட ஹதீஸ்கள் விளக்கிய கருத்து நன்கு உறுதியாகிறது. இந்தவகையில், திருமண விடயத்தில் முழுமையான தெரிவுச் சுதந்திரத்தை பெண் பெறுகிறாள் என்பதே இஸ்லாமிய சட்டத்தின் உறுதியான கருத்தாகும் என்பது நன்கு தெளிவாகிறது.

இந்தக் கருத்தே இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படை விதிகளோடும் ஒத்துச் செல்கிறது. புத்தி சுவாதீனமுள்ள, பருவ வயதடைந்த ஒரு பெண் ஆணைப் போன்றே அனைத்து வகையான கொடுக்கல் வாங்கல்களையும் சுயமாகச் செய்யும் அதிகாரம் கொண்டவள் என்பது இஸ்லாமிய சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இவ்வாறான நிலையில் அவளது வாழ்க்கைத் துணையைத் தீர்மானிப்பதில் அவளது பொறுப்புதாரர் முழு அதிகாரம் கொண்டிருந்தால் அது இஸ்லாமிய சட்டத்தின் பொதுப் போக்குக்கே முரணானது என்பதில் சந்தேகமில்லை. அதாவது பெண்ணின் செல்வத்தில் அவளது தந்தை அவளது அனுமதியின்றி தலையிட முடியாது. இவ்வாறிருக்கும்போது ஒரு பெண்ணின் வாழ்வையே இன்னொரு நிலைக்கு மாற்றும் ஓர் ஒப்பந்தத்தில் பெண்ணின் அபிப்பிராயம் பெறப்பட

வேண்டியதில்லை என்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத கருத்தாகும்.

குடும்பம் சமூகத்தின் அடிப்படை அலகாகும். அது பலமாக இருக்கும் போது சமூகம் பலமடையும் என்பதில் சந்தேகமில்லை. இந்தவகையிலேயே, பரஸ்பர நேசமும் இரக்கமுமே கணவன், மனைவி தொடர்பில் அடிப்படையாக இருக்க வேண்டும் என அல்-குர்ஆன் கூறுகிறது. தந்தை விரும்பும் ஆனால், அவளது மகளின் அபிப்பிராயம் பெறப்படாத அல்லது அவள் வெறுக்கும் ஒருவரைப் பெண்ணுக்குக் கட்டி வைக்கும்போது எவ்வாறு கணவன், மனைவி தொடர்பு பரஸ்பர நேசம், இரக்கம் என்ற அடிப்படை மீது எழ முடியும்? அந்நிலையில், சமூகத்தைப் பலப்படுத்தும் சீரான குடும்பமொன்று தோன்றுவது எவ்வாறு சாத்தியமாகும்?

இவ்வாறுதான் இஸ்லாத்தின் சட்ட அடிப்படைகளும், இஸ்லாம் அமைக்கும் குடும்ப ஒழுங்கும் பெண்ணின் திருமணத்தைத் தீர்மானிக்கும் அதிகாரம் பெண்ணுக்கே உரியது என்ற மேலே விளக்கப்பட்ட சட்ட முடிவுக்கு உடன்பாடாக இருந்து அக்கருத்தை மேலும் பலப்படுத்துகிறது எனக் காண முடிகிறது (ஸுன்னா மற்றும் ஆதாரங்களை ஆராய்தல் என்ற இரு தலைப்புகளையும் விரிவாகப் பார்க்க: இப்னு அல்-கையிம், *2005*, யூஸுப் அல்-கர்ளாவி, *2017* மற்றும் முஹம்மத் இப்னு அலி அல்-ஷவ்கானி, *2012).*

இந்நிலையில், பெண்ணின் திருமண விவகாரத்தில் அவளது பொறுப்புதாரருக்கு குறிப்பாக, தந்தைக்கு அல்லது தந்தையின் தந்தைக்கு என்ன பங்கு உள்ளது என்பதை விளக்குவது இச்சட்ட விளக்கத்தின் இன்னொரு பகுதியாகும். அதனை விளக்க கீழ்வரும் ஹதீஸ்களை முதலில் நோக்குவது அவசியமாகிறது.

1. ஆயிஷா (ரழி), இறை தூதர் (ஸல்) கூறியதாக அறிவிக்கிறார்: “எந்தப் பெண்ணாயினும் பொறுப்புதாரரின் அனுமதியின்றி தான் சுயமாகத் திருமணம் முடித்துக் கொண்டால், அத்திருமணம் செல்லுபடியற்றதாகிறது, அத்திருமணம் செல்லுபடியற்றதாகிறது...” *(*ஸுனன் திர்மிதி: *1102*, அபூ தாவூத்: *2083*, இப்னு மாஜா: *1879)*

2. அபூ மூஸா அல்-அஷ்அரீ (ரழி) இறை தூதர் கூறியதாக அறிவிக்கிறார்: “பொறுப்புதாரர் இல்லாது, திருமணம் என்பது கிடையாது” (ஸுனன் அபூ தாவூத்: *2085*, திர்மிதி: *1101* - அல்பானி ஸஹீஹ் அல்-ஜாமிஉ அல்-ஸகீர்: *7555)*

இந்த ஹதீஸ்கள் பொறுப்புதாரருக்கு பெண்ணின் திருமணத்தில் ஓர் அதிகாரம் உள்ளது எனக் காட்டுகின்றன. முன்னைய பகுதியில், பெண்ணின் திருமணத்தில் தீர்மானமான அதிகாரம் பெண்ணுக்கே உரித்தாகிறது என விளக்கப்பட்டது. அதற்காக ஆதாரமாகக் கொள்ளப்பட்ட ஹதீஸ்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸ்களையும் விட பலம் வாய்ந்தவை என்பதில் சந்தேகமில்லை. ஆதாரங்களின் இவ்விரு வகைப் போக்கையும் நோக்கும்போது

அவை பெண்ணுக்குத் தெரிவுச் சுதந்திரத்தைக் கொடுத்த அதேவேளை, பொறுப்புதாரருக்கும் ஒரு அதிகாரத்தைக் கொடுப்பதாகக் கருத முடிகிறது.

இது ஒரு முரண்பாடு போல் வெளிப்படையில் தோன்றினாலும் உண்மையில் அது அவ்வாறானதல்ல. இருவகையாக அமைந்திருக்கும் அந்த ஹதீஸ்கள் கீழ்வருமாறு பொறுப்புதாரர் குறித்த சட்ட ஒழுங்கை அமைக்க ஏதுவாகின்றன.

பெண்ணின் திருமணத்தில் அவளது பொறுப்புதாரர், திருமணம் முடிக்கும் பெண் என்ற இருவருக்கும் ஒரு கூட்டுப்பொறுப்பு அல்லது அதிகாரம் உள்ளது. தனியாக ஒருவர் மட்டும் முழு அதிகாரத்தையும் பெறுவதில்லை என்பதுவே இருவகையில் அமைந்திருக்கும் இந்த ஹதீஸ்கள் கொடுக்கும் கருத்தாகும். இன்னொரு வகையில் கூறுவதாயின் பொறுப்புதாரர் ஒரு கண்காணிப்பாளராக இயங்கும் பொறுப்பைப் பெறுவார் எனக் கூற முடியும். இங்கு பொறுப்புதாரர் எனக் குறிக்கப்படுவது பெண்ணின் தந்தையை மட்டுமே என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ஷாபியீ மத்ஹபின்படி தந்தையின் தந்தையும் இதில் இணைவார்.

இந்தவகையில், இம்முடிவின் நடைமுறை சட்ட ஒழுங்கு கீழ்வருமாறு அமைகிறது:

i. பெண்ணின் அதாவது மணமகளின் அனுமதியின்றி நடக்கும் திருமணம், அது தந்தையே நடத்தினாலும் செல்லுபடியாக மாட்டாது. இது பற்றி இறை தூதர் (ஸல்) அவர்களே கூறியமை முன்னால் குறிப்பிடப்பட்டது. இது ஹனபி மத்ஹபின் கருத்தாகும். அத்தோடு, இமாம் ஷவ்கானி, இமாம் இப்னுல் கையிம், நவீன காலப் பிரிவில் கலாநிதி முஸ்தபா ஸிபாஈ போன்ற பலரும் இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றனர். பெண் திருமண ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் என்பதன் பொருள் இவ்வாறு புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

ii. பெண் சுயமாக முடிவெடுத்து ஒருவரைத் திருமணம் முடித்துக் கொள்ளும் நிலையில் அவள் தகுதியானவரைத் தெரிவு செய்யவில்லை எனப் பொறுப்புதாரர் காண்பாராயின் அத்திருமணத்திற்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்து நீதிமன்றத்தில் முறையிட முடியும். அந்நிலையில், நீதிமன்றம் இரு பக்க நியாயங்களையும் விசாரித்து தீர்ப்பு வழங்கும். அதுவே திருமணம் பற்றிய இறுதி முடிவாகும். எனினும், இவ்வாறு ஆட்சேபனை தெரிவித்து வழக்குப் பதிவு செய்ய ஒரு காலக்கெடு வரையறுக்கப்படுவது அவசியமானதாகும் (பொறுப்புதாரர் பற்றிய இப்பகுதியை விரிவாகப் பார்க்க: முஸ்தபா ஸிபாஈ, 2001, முஸ்தபா ஷலபி, 1977 மற்றும் அப்துர் ரஹ்மான் ஸாபூனி, 2001).

இதுவும் ஹனபி மத்ஹபினரது கருத்தாகும். குறிப்பாக இமாம் அபூ ஹனீபாவின் கருத்தாகும். திருமணத்தில் மணமகள், அவளது தந்தையான பொறுப்புதாரர் இருவருக்கும் இறை தூதர் (ஸல்) அவர்கள் அதிகாரம்

வழங்கியுள்ளமையை இவ்வாறு புரிந்துகொள்வதே மிகப் பொருத்தமானதாகும். ஹனபி மத்ஹபினரது இக்கருத்து இந்த ஆய்வின் ஆரம்பத்தில் மதுஹபுகளின் கருத்துக்களை விளக்கிய போது குறிப்பிடப்பட்டது.

ஷாபியீ மத்ஹபினர், தந்தை, தந்தையின் தந்தை என்போர் தமது பெண்களுக்கு கட்டாயத் திருமணம் முடித்து வைக்கும் அதிகாரத்தைப் பெற்றாலும் சில நிபந்தனைகளுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டும் என விளக்கி அதற்கு ஐந்து நிபந்தனைகளை இட்டனர். அவற்றை ஆய்வின் ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். அந்த நிபந்தனைகள் ஹனபி மத்ஹபின் இக்கருத்துக்கு மிக நெருக்கமானது என்பதில் சந்தேகமில்லை. அந்தவகையில், ஷாபியீ மத்ஹபின் அபிப்பிராயமும் ஹனபி மத்ஹபின் அபிப்பிராயமும் ஏறத்தாழ ஒத்து செல்கிறது எனக் கருத முடியும். எனினும், ஹனபி மத்ஹபினர் குறிப்பாக, இமாம் அபூ ஹனீபா பெண்ணின் பக்கம் நின்று, ‘‘வலி’’ பற்றிய கருத்தை ஒழுங்குபடுத்தியுள்ளமையே இங்கு காணப்படும் சிறப்பம்சமாகும்.

இஸ்லாமிய சட்ட ஒழுங்கில் இது ஆதாரபூர்வமான அபிப்பிராயம் என்பது மட்டுமல்ல, பெண்ணின் திருமணத்தை சீராகவும் அநியாயங்கள் ஏதும் நிகழாமலும் அமைப்பதற்குப் பொருத்தமான சட்ட ஒழுங்கு இது என்று கருதுகின்றோம்.

## *5.* ஆய்வு முடிவுகள்

பெண்ணின் திருமணத்தில் அவளது அனுமதி, பொறுப்புதாரரின் வகிபாகம் என்பவை பற்றிய ஆதாரங்களை எடுத்து ஆராய்ந்தபோது கீழ்வரும் முடிவுகளை எட்ட முடியும்.

பெண், திருமணத்தின் போது அவளுக்கான கணவனைத் தெரிவு செய்வதில் பூரண சுதந்திரத்தைப் பெறுகிறாள். அதேவேளை, அவளது வலி - பொறுப்புதாரரு-க்கும் திருமண ஒப்பந்தத்தில் தவிர்க்க முடியாத ஓர் இடம் உள்ளது. இதனைக் கீழ்வருமாறு ஒழுங்குபடுத்தி விளக்கலாம்:

i. பெண்ணின் திருமணத்திற்குப் பொறுப்புதாரர் - வலி - கட்டாயமானது போலவே, அவளது அனுமதி பெறப்படுதலும் கட்டாயமானதாகும். அந்த, ‘‘வலி’’ தந்தை அல்லது தந்தையின் தந்தையாயினும் பெண்ணிடத்தில் அனுமதி கேட்டல் என்ற விடயத்தில் வித்தியாசம் கிடையாது.

ii. பொறுப்புதாரர் - வலி - இல்லாது நடைபெறும் திருமணம் செல்லுபடியாகாதது போலவே, பெண்ணின் அனுமதியற்ற திருமணமும் செல்லுபடியாக மாட்டாது. இந்தவகையில், பெண்ணின் அனுமதியின்றித் திருமணம் நடந்து விட்டால் ஆட்சேபனைத் தெரிவித்து நீதிமன்றத்தில் முறையிட பெண்ணுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும். எனினும், அதற்கொரு காலக்கெடுவும் வழங்கப்பட வேண்டும்.

iii. பெண்ணின் திருமணத்தை அனுமதிப்பதாக உறுதி செய்யும் பொறுப்புதாரரின் -வலி-யின் கையொப்பம் திருமண ஒப்பந்தத்தில் கட்டாயமானது. அவ்வாறே, திருமணத்திற்கான பெண்ணின் அனுமதியைக் காட்டும் கையொப்பமும் கட்டாயமானதாகும்.

iv. பொறுப்புதாரர் இல்லாது நடைபெறும் திருமணம் செல்லுபடியாக மாட்டாது என்பதே அடிப்படையாயினும், பெண் சுயமாக முடிவெடுத்து ஒருவரை மணம் முடித்து விட்டால், அதனை ஒரு விஷேட நிலையாகக் கண்டு, திருமணத்தை ரத்துச் செய்யாது, பெண் பொருத்தமானவரைத் தெரிவு செய்யவில்லை என்று, "வலி" கண்டால் மட்டும் அவருக்கு ஆட்சேபணை தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்யும் உரிமையைக் கொடுப்பது மிகப் பொருத்தமானதாகும். இவ்வாறு, வழக்குத் தாக்கல் செய்ய ஒரு காலக்கெடு கொடுப்பது, முடிந்த திருமணத்தை குழப்பாதிருக்க அவசியமானதாகும்.

இதுவரை இஸ்லாமிய சட்டத்தில் பெண்ணின் திருமணத்தில் அவளது சுதந்திரத் தெரிவு, அவளது பொறுப்புதாரரின் வகிபாகம் என்பவற்றை விளக்கினோம். இனி, இதனோடு சம்பந்தப்படும் இலங்கை முஸ்லிம்களது திருமண வாழ்வில் பிரயோகமாகும் சட்ட ஒழுங்கை நோக்குவது அவசியமாகிறது. முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட நகல், "Muslim Marriage and Divorce Act" என அழைக்கப்படும் அச்சட்ட நகலின் திருமணம் முடித்தல் சம்பந்தமான பகுதியைக் கீழே தருகிறோம்.

*(1) சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, ஷாபியீ பிரிவைச் சேர்ந்த ஒரு பெண்ணின் எந்தவொரு திருமண ஒப்பந்தமும் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில், அந்தப் பிரிவினருக்குப் பொருந்தும் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.*

*(அ) பெண்ணின் வலியாகச் செயல்படத் தகுதியுடைய நபர் ஒருவர் இருத்தல்.*

*i. திருமண ஒப்பந்தம் இடம்பெறும் நேரத்தில் அவ்விடத்தில் பெண்ணின் வலி பிரசன்னமாகி இருத்தல் மற்றும்,*

*ii. அவர் திருமண ஒப்பந்தத்திற்கான பெண்ணின் சம்மதத்தைத் தெரியப்படுத்தி தனது சொந்த ஒப்புதலையும் தெரிவித்தல் அல்லது*

*(ஆ) 47ம் பிரிவின் கீழ் வலியின் இருப்பு மற்றும் ஒப்புதலுக்கான அவசியத்தைத் தளர்த்திவிட்டு குவாஸி அந்தத் திருமணத்திற்கு அங்கீகாரம் வழங்குதல்.*

*(2) துணைப் பிரிவு 1இல் குறிப்பிடப்பட்டுள்ள, சட்டத்தின் கீழ் செல்லாத திருமணம் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட மாட்டாது.*

## *5. முஸ்லிம் தனியாள் சட்டமும் அதன் மீது முன்வைக்கப்பட்ட திருத்தங்களும் - ஒரு சுருக்க நோக்கு*

முஸ்லிம் தனியாள் சட்டம் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல சந்தர்ப்பங்களில் எழுந்து வந்துள்ளது. பல குழுக்களும் திருத்தங்களுக்கான தமது பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. அவற்றில் முக்கியமான இரு குழுக்களை மட்டும் இங்கே சுருக்கமாகத் தருகிறோம். முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திருமணம் முடித்தல் சம்பந்தமான சட்டப் பகுதி பற்றிய பரிந்துரைகளை மட்டுமே நாம் இங்கே விளக்குகிறோம். அதுவே எமது தலைப்போடு சம்பந்தப்பட்டதாகும்.

### *5.1 ஜனாதிபதி சட்டத்தரணி ஷஹாப்தீன் குழுவினரது ஆய்வும் பரிந்துரையும்*

இக்குழுவினர் திருமணம் முடித்தல் சம்பந்தமான இச்சட்டப் பகுதியில் திருத்தம் எதுவும் செய்ய வேண்டியதில்லை என்கின்றனர். அதனை அவர்கள் கீழ்வருமாறு விளக்குகின்றனர்:

> “வலி - பொறுப்புதாரரின் அனுமதி பெறாமல் ஒரு பெண்ணை ஆண் திருமணம் முடிப்பது அனுமதிக்கப்பட்டதல்ல. குறிப்பிட்ட பெண், கன்னிப் பெண்ணாயினும் விதவைப் பெண்ணாயினும் இருவருக்கும் இது பொருந்தும். இது, மாலிகி, ஷாபியீ, ஹம்பலி மத்ஹபினர் உட்பட பெரும்பாலான இமாம்களது கருத்தாகும். இவ்வாறு, வலியின் அனுமதியின்றி நடக்கும் திருமணம் செல்லுபடியற்றதாகும்...”

எனினும், இப்பிரிவினர் அடுத்து, வலியின் அனுமதியின்றி நடக்கும் திருமணம் செல்லுபடியாகும் என்ற ஹனபி மத்ஹபினரது கருத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றனர் (Report of the committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act – Shahabdeen committee).

### *இக்கருத்து பற்றிய எமது அபிப்பிராயம்:*

இது பற்றி இரண்டு அபிப்பிராயங்களை முன்வைக்கிறோம்.

1. பெண்ணின் திருமணத்தில் பொறுப்புதாரர்களது – வலிகளது - ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது அவசியம் எனக் கண்ட ஷாபியீ மத்ஹபின் அறிஞர்கள் கீழ்வரும் இரு கருத்துக்களையும் குறிப்பிடுகின்றனர்:

   i. திருமணத்தின்போது பெண்ணிடம் அனுமதி கேட்டல் கட்டாயமல்ல என்ற கருத்து வலிகளாக அமையும் தந்தை, தந்தையின் தந்தை என்போருக்கு மட்டுமே பொருந்தும்.

   ii. தந்தை, தந்தையின் தந்தை என்போர் பெண்ணின் அனுமதி பெறாமலே திருமணம் முடித்துக் கொடுக்கலாமாயினும் அதற்கு

ஐந்து நிபந்தனைகள் பேணப்பட வேண்டும். (இந்த ஆய்வின் முதலாம் பக்கம் பார்க்க)

ஷாபியீ மத்ஹபின் உள்ளேயே காணப்படும் இக்கருத்துக்களைக் கூறியாவது சில மாற்றங்களைக் கொண்டு வர இக்குழுவினர் முயன்றிருக்கலாம்.

2. குடும்பத்தின் சீரான நிலைக்கு இக்கருத்து பாதகமாக அமையும் சந்தர்ப்பம் உள்ளது. கணவன், மனைவி தொடர்பானது, பரஸ்பர நேசம், இரக்கத்தின் மீது அமைதல் வேண்டும் என அல்-குர்ஆன் கூறுகிறது. பெண்ணின் விருப்பம் கவனத்தில் கொள்ளப்படுவது இதற்கு மிகவும் அவசியமானது என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக, இவ்விடயத்தில் கால மாற்றம் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கலாம். அதாவது, பெண்ணின் அனுமதி பெறாமல் அவளைத் திருமணம் முடித்து வைத்தல் என்ற கருத்து, பழைய சமூகங்களுக்கு சில வேளை பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால், பெண்கள் கல்வித் துறையில் முன்னேறி சமூக வாழ்வில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்யும் தற்போதைய சமூக சூழ்நிலைக்கு இக்கருத்து பொருத்தமானதல்ல.

இந்நிலையைக் கவனத்திற் கொண்டு ஒரு முழுமையான ஆய்வின் மூலம் சில மாற்றங்களுக்கு வந்திருக்கலாம். இது தவிர்க்கக்கூடாத காலத்தின் தேவையாகும்.

## 5.2 நீதிபதி சலீம் மர்ஸூப் குழுவினரது பரிந்துரைகள்

இக்குழுவினர் பரிந்துரைகளை முன்வைக்க முன்னர், ‘‘திருமணப் பதிவு, வலி பற்றிய ஷரீஆவின் அடிப்படைகள்’’ என்ற தலைப்பில் அது பற்றிய விளக்கமொன்றைத் தருகிறார்கள். அதனைக் கீழே சுருக்கித் தருகிறோம்:

i. ஓர் ஆண், ஒரு பெண் அவள் கன்னியாக அல்லது விதவையாக அல்லது திருமணம் முடித்து மணமுறிவுக்குற்பட்டவளாக எந்நிலையில் இருந்தாலும் பொறுப்புதாரர் -வலியின் - அனுமதியின்றித் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட மாட்டாள். இது ஷாபியீ, மாலிகி, அஹ்மத் உட்பட பெரும்பாலான இமாம்களின் கருத்தாகும். ஷரீஆவின்படி திருமண ஒப்பந்தத்தில் வலியின் பங்கேற்பு மிகக் கட்டாயமானதாகும். வலியின் பங்கேற்பு இல்லாத போது அத்திருமணம் செல்லுபடியாக மாட்டாது. தொடர்ந்து, ஹனபி மத்ஹபின்படி வலி இல்லாத திருமணம் நிறைவேறும் என்ற கருத்திற்கு விளக்கமளிக்கப்படுகிறது.

ii. ஷரீஆ வலியின்றி திருமணம் செல்லுபடியாக மாட்டாது எனக் கூறும் அதேவேளை, இறை தூதுர் (ஸல்) அவர்கள், பொறுப்புதாரர் மணமகளிடம் அவளது எதிர்கால வாழ்வில் பங்குகொள்பவரை மணமுடிக்க அனுமதி பெற வேண்டும் என வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

இது உண்மையில் ஒரு கட்டாயமான செயற்பாடாகக் கொள்ளப்பட வேண்டும். அத்தோடு, அது பின்பற்றப்படாத போது ஒரு குற்றமாகவும் கருதப்பட வேண்டும். (இது பற்றிய ஹதீஸ் இங்கு இடப்படுகிறது. அதே ஹதீஸ் பக்கம் 04இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

iii. மகளின் வலியாக இருக்கும் தந்தை, அவள் கன்னிப் பெண்ணாக இருப்பின் அவளது அனுமதி இன்றியே திருமணம் முடித்துக் கொடுக்க முடியும். எனினும், அதற்குச் சில ஷரத்துகள் உள்ளன. எனினும், கன்னிப் பெண்ணிடம் தந்தை அனுமதி கேட்பது முஸ்தஹப் ஆகும். விதவை அல்லது திருமணம் முடித்து மணமுறிவுக்குற்பட்ட பெண்ணாயின் அவளிடம் அனுமதி கேட்டே தந்தை மணமுடித்துக் கொடுக்க வேண்டும். கன்னிப் பெண்ணைப் பொறுத்தவரையில், அவளது அனுமதி இன்றித் திருமணம் முடித்துக் கொடுத்தால் அது செல்லுபடியாக சில நிபந்தனைகள் உள்ளன. (இங்கு ஷரத்துகள் குறிக்கப்படுகின்றன. அவை நாம் இந்த ஆய்வில் 1ஆம் பக்கத்தில் குறிப்பிட்ட அதே ஷரத்துகளாகும்.)

iv. குறிப்பிடப்பட்ட இந்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தாதபோது பெண் குறிப்பிட்ட திருமணத்தை ஏற்காதிருக்க உரிமை பெறுகிறாள். இதன் நடைமுறைப் பிரயோகத்தை விளக்கும்போது தற்போதைய தனியாள் சட்ட நகலின் 47(2) பிரிவின் படி வலியை நீக்க நீதிமன்றம் அதிகாரம் பெறுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டு இவ்விடயத்திலும் அது பிரயோகிக்கப்பட முடியும் என விளக்கமளிக்கப்படுகிறது.

இந்த விளக்கத்தின் பின்னர் இக்குழுவினர் தமது பரிந்துரைகளை முன்வைக்கின்றனர். அதனை இங்கே சுருக்கித் தருகிறோம்.

### *5.3 பரிந்துரைகள்*

பெண்ணின் அனுமதி பெறல் என்ற கருத்தோடு சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் இரண்டை இக்குழுவினரது ஆய்வில் காண முடிகிறது.

i. திருமணத்தில் ஏற்படும் விரும்பத் தகாத நிகழ்வுகளை மட்டுப்படுத்துவதற்காக அல்லது குறைப்பதற்காக மஸ்லஹா அடிப்படையில் மணமகளின் கையொப்பத்தைப் பெறுவது கட்டாயத் தேவையாக இருக்க வேண்டும். மேலும் அவ்விதம் கையொப்பத்தைப் பெறாமல் இருப்பது ஒரு குற்றமாகப் பதிவாளரால் கருதப்படல் வேண்டும். அவ்வாறு கருதப்படாத பட்சத்தில் சட்டத்தின் பாகம் X (குற்றங்கள் மற்றும் தண்டனைகள்) இன் கீழ் அதுவும் ஒரு குற்றமாகக் கருதப்படல் வேண்டும்.

ii. பிரிவுகள் 17 (திருமணத்தைப் பதிவு செய்வதற்கான கடமை), பிரிவு 18 (அறிக்கை மற்றும் பதிவின் வடிவம்) மற்றும் பிரிவு 19 (திருமணக்

கையொப்பமும் சான்றறிக்கையும் பதிவு செய்யப்படல்) இப்பிரிவுகளில் மணப் பெண்களின் கையொப்பம் மற்றும் ஒப்புதல் இடம்பெறும் வகையில் திருத்தப்படலாம் எனக் கூறி திருத்தப்படும் ஒழுங்கு இங்கு விளக்கப்படுகிறது. அது விளக்கமாக இங்கே குறிக்கப்படுவது முக்கியமானதல்ல என்பதால் தவிர்க்கப்படுகிறது (Report of the committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act - நீதிபதி சலீம் மர்ஸூப் குழுவினது அறிக்கை).

### *5.4 இது பற்றிய எமது கருத்து*

i. சட்ட மத்ஹபுகளை மையப்படுத்தியதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. அவற்றில் அதிகமானவை பெண்ணின் திருமணத்தில், “வலி”யின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றமையால் இப்பிரிவினரது ஆய்வும் அப்போக்கிலேயே அமைந்துவிட்டது. குறிப்பாக, பெண்ணின் வலி இல்லாத போது திருமணம் செல்லுபடியாக மாட்டாது என்ற பெரும்பான்மைச் சட்ட அறிஞர்களது கருத்து பெண்ணிடம் அனுமதி கேட்டல் என்ற கருத்துக்கு இடமில்லை என்ற சிந்தனையை இப்பிரிவினரிடம் உருவாக்கி விட்டது. ஹனபி மத்ஹபின் அபிப்பிராயத்தை இப்பிரிவினர் குறிப்பிட்டாலும் அது உரிய முறையில் புரியப்படவில்லை என்றே கருதுகின்றோம். முக்கியமாக, மணப்பெண்ணின் திருமணத்தில் வலிக்கு இடம் கொடுத்தால் அது பெண்ணுக்கு இடம் கொடுக்காததாகும் மணப்பெண்ணின் தெரிவுக்கு இடம் கொடுத்தால் அது வலிக்கு இடம் கொடுக்காததாகும் என்ற சிந்தனை இங்கு செல்வாக்குச் செலுத்தி உள்ளது என்று கருத முடிகிறது.

இப்பின்னணியிலேயே, இறை தூதர் (ஸல்) அவர்கள், மணப்பெண்ணிடம் அனுமதி கேட்டலை வலியுறுத்துகிறார்கள் எனக் கூறி, அதற்கான ஹதீஸைக் குறித்துக் காட்டிவிட்டு, பெண்ணிடம் அனுமதி பெறல் கட்டாயமானதாகக் கொள்ளப்பட வேண்டும் என இக்குழுவினர் கூறிய போதிலும், அக்கருத்தை ஒட்டிச் செல்லாமல் வலியின் அதிகாரத்திற்கே அழுத்தம் கொடுக்கும் நிலைக்கு இப்பிரிவினர் சென்றுள்ளனர்.

ii. பெண்ணின் திருமணத்தில் வலி குறிப்பாக, தந்தையே மைய அதிகாரத்தைப் பெறுகிறார் என்பதுவே ஆதாரபூர்வமான கருத்து என்ற சிந்தனையின் காரணமாக அப்பக்கம் நின்று கொண்டு பெண்ணின் தெரிவுக்கு வழியமைத்துக் கொடுக்க இக்குழுவினர் முயற்சித்துள்ளனர்.

அந்தவகையில், பெண்ணின் அனுமதி பெறப்படாது தந்தை திருமணம் முடித்துக் கொடுத்தலுக்கான ஷரத்துகள் இடல், மஸ்லஹாவை அடிப்படையாகக் கொண்டு பெண்ணின் கையொப்பத்தைப் பெறலைக் கட்டாயமாக்கல். அவ்வாறு இல்லாதபோது தண்டனை விதித்தல், திருமணப் பதிவோடு சம்பந்தப்பட்ட பகுதியின் ஊடாகப் பெண்ணின் கையொப்பம்

மற்றும் அனுமதி பெறும் நிலையை உருவாக்கல் என்ற ஒழுங்குகளை இக்குழுவினர் காட்டியுள்ளனர்.

பெண்ணின் அனுமதி பெறப்படாத திருமணத்திற்கு இடப்பட்ட ஷரத்துகள் ஷரீஆவின் ஷரத்துகள் என இங்கு கூறப்பட்டாலும் அது உண்மையில் ஷாபியீ மத்ஹபின் சில அறிஞர்கள் இட்ட ஷரத்துகளாகும். இதனை நாம் எமது ஆய்வின்போது குறிப்பிட்டோம். அத்தோடு, ''மஸ்லஹா'' என்ற மூலாதாரத்தை அடிப்படையாக இங்கு கொண்டிருப்பது பொருத்தமானதல்ல. ஏனெனில், சட்ட வசனங்கள் காணப்படும்போது மஸ்லஹா பிரயோகிக்கப்படுவதில்லை என்பது இஸ்லாமிய சட்ட முறைமையின் அடிப்படை விதிகளில் ஒன்றாகும்.

iii. சட்ட மத்ஹபுகளை மையமாகக் கொள்ளாது, இப்பகுதியில் காணப்படும் குறிப்பாக, ஸுன்னா தரும் ஆதாரங்களை மையமாகக் கொண்டு, அப்பின்னணியில் மத்ஹபுகளை நோக்கி இருந்தால், திருமணத்தில் மணப்பெண்ணின் தெரிவுச் சுதந்திரம் நன்கு தெளிவாகவே உறுதிப்பட்டிருக்கும். அப்போக்கையே நாம் முன்னால் எமது ஆய்வில் கையாண்டுள்ளோம்.

இத்தகைய சில குறைபாடுகள் இக்குழுவினரது ஆய்வில் காணப்பட்டாலும், இப்பகுதி பற்றிய ஷரீஆவின் உண்மையான நிலைப்பாட்டைக் காண முயற்சித்து ஓரளவு அதனை அடைந்துள்ளமை பாராட்டத்தக்க ஒரு விடயமாகும்.

### 6. திருத்தங்களுக்கான பரிந்துரைகள்

ஆய்வின் இறுதியில் சட்டத்தரணி ஷஹாப்தீன் குழுவினர் மற்றும் நீதியரசர் சலீம் மர்ஸூப் குழுவினர் என்போரது பரிந்துரைகளை நோக்கினோம். அவை போதுமானளவு தெளிவையும் உறுதியான முடிவுகளையும் தரவில்லை என்பது எமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

இப்பின்னணியில், எமது ஆய்வுக்குட்பட்ட வகையில் கீழ்வரும் பரிந்துரைகளை முன்வைக்கிறோம். அவை ஏற்கெனவே தரப்பட்ட ஆய்வு முடிவுகளை ஒட்டியதாக அமைகின்றன.

தற்போதைய முஸ்லிம் விவாகம், விவாகரத்து சட்ட நகலில் (Muslim Marriage and Divorce Act) காணப்படும் திருமணம் முடித்தல் பற்றிய பகுதியை குறிப்பிட்டு, அதனைத் தொடர்ந்து எமது பரிந்துரைகளையும் முன்வைப்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறோம்.

*25 (1)* சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, ஷாபியீ பிரிவைச் சேர்ந்த ஒரு பெண்ணின் எந்தவொரு திருமண ஒப்பந்தமும் பின்வரும் நிபந்தனைகள்

பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில், அந்தப் பிரிவினருக்குப் பொருந்தும் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

*(அ)* பெண்ணின் வலியாகச் செயல்படத் தகுதியுடைய நபர் ஒருவர் இருத்தல்.

iii. திருமண ஒப்பந்தம் இடம்பெறும் நேரத்தில் அவ்விடத்தில் பெண்ணின் வலி பிரசன்னமாகி இருத்தல் மற்றும்,

iv. அவர் திருமண ஒப்பந்தத்திற்கான பெண்ணின் சம்மதத்தைத் தெரியப்படுத்தி தனது சொந்த ஒப்புதலையும் தெரிவித்தல் அல்லது

*(ஆ)* 47ம் பிரிவின் கீழ் வலியின் இருப்பு மற்றும் ஒப்புதலுக்கான அவசியத்தைத் தளர்த்திவிட்டு குவாஸி அந்தத் திருமணத்திற்கு அங்கீகாரம் வழங்குதல்.

*(2)* துணைப் பிரிவு *1*இல் குறிப்பிடப்பட்டுள்ள, சட்டத்தின் கீழ் செல்லாத திருமணம் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட மாட்டாது.

சட்ட நகலின் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்கான பரிந்துரைகளைக் கீழே தருகிறோம். சட்டத்துறை சார்ந்தவர்கள் அவற்றைச் சட்ட வடிவில் ஒழுங்கமைத்துக்கொள்ள முடியும்.

பிரிவு *25*

*1.* *(அ)* i. திருமண ஒப்பந்தம் இடம்பெறும் நேரத்தில் அவ்விடத்தில் பெண்ணும் -மணமகளும்- அவளது வலியும் பிரசன்னமாக இருத்தல் மற்றும்,

ii. பெண் -மணமகள்- திருமண ஒப்பந்தத்திற்கான தனது சம்மதத்தை வாய் மூலமோ எழுத்து மூலமோ தெரிவித்தல், வலியும் தனது ஒப்புதலை தெரிவித்தல் அல்லது,
47ம் பிரிவின் கீழ் மணப்பெண்ணின் சுய விருப்பத்தை வலி ஏற்காது திருமணத்தைத் தடுத்து வருகிறார் எனக் காணும் போது, வலியின் இருப்பு மற்றும் ஒப்புதலுக்கான அவசியத்தைத் தளர்த்திவிட்டு குவாஸி அந்தத் தீர்மானத்திற்கு அங்கீகாரம் வழங்குதல். அத்தோடு,

மணப்பெண்ணானவர் வலியின் விருப்பத்திற்கு மாற்றமாகத் திருமணம் முடித்திருந்தால், அதேவேளை வலி தந்தையாக அல்லது தந்தையின் தந்தையாக இருந்து, குவாஸி நீதிமன்றத்தில் ஆட்சேபனையும் தெரிவித்திருந்தால் பெண் திருமணம் முடித்த ஆண், பெண்ணுக்குப் பொருத்தமானவர், திருப்தியானவர் என்பதைக் கண்டறிய குவாஸி விசாரணை நடாத்தித் திருமணத்திற்கு அங்கீகாரம் வழங்குதல் அல்லது திருமணத்தைச் செல்லுபடி அற்றதாகச் செய்தல். ஆனால், தந்தை அல்லது தந்தையின் தந்தை அல்லாத ஏனைய பொறுப்புதாரர்களது மேற்குறிப்பிட்ட வகையிலான ஆட்சேபனைகளை நீதிமன்றம் ஏற்காதிருத்தல். ஏனெனில்,

வலியாக இருத்தலில் தந்தையும் தந்தையின் தந்தையும் பெறும் அந்தஸ்தை அவர்களுக்கு இஸ்லாமிய சட்டம் வழங்கவில்லை.

2. பிரிவு - 17 திருமணத்தைப் பதிவு செய்வதற்கான கடமை,
   பிரிவு - 18 அறிக்கை மற்றும் பதிவின் வடிவம்,
   பிரிவு -19திருமணக் கையொப்பமும் சான்றறிக்கையும் பதிவு செய்யப்படல் ஆகியவை மணப்பெண்களின் கையொப்பம் மற்றும் ஒப்புதல் காட்டப்படும் வகையில் திருத்தப்படல்.

   இதனை நீதிபதி சலீம் மர்ஸூபின் திருத்தத்திற்கான பரிந்துரைகளில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமையால் மீண்டும் அதனை இங்கு குறித்துக் காட்ட வேண்டியதில்லை எனக் கருதுகிறோம்.

## 7. முடிவுரை

இஸ்லாத்தின் மூலாதரங்களான அல்-குர்ஆன், ஸுன்னாவை ஆராயும்போது திருமணம் என்ற ஒப்பந்தத்தில் பெண் அடிப்படையில் ஒரு தரப்பாக இருந்து சுதந்திரமாகத் தனக்கான வாழ்க்கைத் துணையைத் தெரிவுசெய்யும் அதிகாரத்தைப் பெறுகிறாள் என்பது நன்கு தெளிவாகிறது. அவளுக்கான பொறுப்புதாரர் - வலி - தந்தையாக அல்லது தந்தையின் தந்தையாக இருக்கும்போது மட்டும் அவரது சம்மதம் கட்டாயமாகிறது. அந்நிலையில், அவர் ஒரு கண்காணிப்பாளர் என்ற வகையில் செயற்படுவதே பொருத்தமானதாகும். இவை இந்த ஆய்வின் முடிவுகளாகும். இந்த ஒழுங்கின் பின்னணியிலேயே முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட நகல் மீள் ஒழுங்குபடுத்தப்படல் பொருத்தமானது என்பது இந்த ஆய்வின் பரிந்துரையாகும்.

## உசாத்துணை நூற்கள்


நவவி. (2017). *கிதாப் அல்-மஜ்மூ.்.* 3ஆம் பதிப்பு, லெபனான்: தார் அல்-குத்ப் அல்-இஸ்லாமிய்யா.

முஸ்தபா ஸிபாஇ. (2001). *ஷரஹ் கானூன் அல்-அஹ்வால் அல்-ஷக்ஷிய்யா.* 9ம் பதிப்பு, ரியாத்: தார் அல்-வர்ராக்.

இப்னு ஆபிதீன். (2011). *ரத் அல்-முஹ்தார்.* 3ம் பதிப்பு, லெபனான்: தார் அல்-குத்ப் அல்-இஸ்லாமிய்யா.

இப்னு குதாமா. (2015). *அல்-முக்னி.* 1ம் பதிப்பு, கெய்ரோ: தார் அல்-இல்மிய்யா.

முஸ்தபா ஷலபி. (1977). *அஹ்காம் அல்-உஸ்ரா பீ அல்-இஸ்லாம்.* 2ம் பதிப்பு, பைரூத்:

தார் அல்-நஹ்லா.

முஹம்மத் அல்-ஜுஹைலி. (2015). *அல்-மு.்.தமத் பீ அல்-பிக்ஹ் அல்-ஷாபியீ.* 5ம் பதிப்பு, டமஸ்கஸ்: தார் அல்-கலம்.

இப்னு அல்-கையிம். (2005). *ஜாத் அல்-மஆத்.* 1ம் பதிப்பு, கெய்ரோ: தார் இப்னு ஹைதம்.

யூஸுஃப் அல்-கர்ளாவி. (2017). *பிக்ஹ் அல்-உஸ்ரா.* 1ம் பதிப்பு, துருக்கி: அல்-தார் அல்-ஷாமியா.

முஹம்மத் இப்னு அலி அல்-ஷவ்கானி. (2012). *நைல் அல்-அவ்தார்.* 1ம் பதிப்பு, கெய்ரோ: தார் இப்னு அல்-ஜவ்ஸி.

அப்துர் ரஹ்மான் ஸாபூனி. (2001). *நிலாம் அல்-உஸ்ரா வ ஹல்லு முஷ்கிலாதிஹா பீ ளவ்இில் இஸ்லாம்.* 1ம் பதிப்பு, பெய்ரூத்: தார் அல்-பிக்ர் அல்-முஆஸிர்.